# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆய்வாளர்***
**INFORMATION SECURITY** THREAT ANALYST

**பிரதான பொறுப்புகள்**

- பாதுகாப்பு ஆய்வு சாதனங்களின் மூலம் அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்துகள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல்.
- கூட்டாண்மை தகவல் ஆதனங்களின் பாதுகாப்பு நிர்வாகத்தினை தீவிரப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- ஆபத்தான நிலைமைகளை அறிக்கையிடல் மற்றும் தீர்வுகளை முன்மொழிதல் மற்றும் தொடர் பாதுகாப்பு பிரச்சனைகளை கையாளுதல்
- காலத்துக்கேற்ப இணையவழி பாதுகாப்பு ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு உதவி அளித்தல்.
- வருடாந்த இடர் மற்றும் பரிசோதனை தேவைகளுக்கு உதவி அளித்தல்
- பல்வேறு கைத்தொழில்கள் மற்றும் விஷேட குழுக்களினால் ஏற்படக்கூடிய சைபர் அச்சுறுத்தல்கள் தொடர்பான புலனாய்வு தகவல்கள் தொடர்பாக தேவையான முன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வங்கித் தகவல் கட்டமைப்புகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், தகவல்களின் பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களின் போது உடன் பதில் குறி மற்றும் தானியக்க திட்டங்கள் ஊடாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அடையாளங் காண்பதற்கும், நிர்வகிப்பதற்கும் மற்றும் தடுப்பதற்கும் உதவி அளித்தல்.

**தேவையான தகைமைகள்**

- தகவல் பாதுகாப்பு அல்லது சைபர் பாதுகாப்பு தொடர்பாக (Information Security/Cyber Security) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்

- Certified Ethical Hacker (CEH) போன்ற துறை சார்ந்த பாதுகாப்பு தொழில் தகைமைகளை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- இணையான பதவியொன்றில் 5 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல்
- இடர் முகாமைத்துவம் (Vulnerability Management) மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் தொடர்பான அறிவை கொண்டிருத்தல்.
- சிறந்த ஆய்வு மற்றும் குறைபாடுகளை நீக்கும் ஆற்றலை கொண்டிருத்தல்.

**வயதெல்லை - 45 வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.**

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதோடு தரம் III (2) பதவிக்கு அமர்த்தப்படுவார்கள்.**

***நிறைவேற்று உத்தியோகத்தர் – நிர்வாக இடர் மற்றும் இணக்கம் [தகவல் பாதுகாப்பு]***
**EXECUTIVE** – GOVERNANCE RISK & COMPLIANCE **[Information Security]**

**பிரதான பொறுப்புகள்**

- ஏற்புடைய ஒழுங்குபடுத்தல்களுக்கு ஏற்புடையதாக தகவல் பாதுகாப்பு கொள்கை மற்றும் நடைவடிக்கைமுறைகளை உருவாக்குதல், செயற்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்கு உதவி அளித்தல்.
- பாதுகாப்பு கொள்கைகளை காலமுறை தோறும் செயற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் உதவி அளித்தல்.
- பாதுகாப்பு கொள்கைகளுக்கு ஏற்புடைய நிர்வாக கோப்புகளை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல் மற்றும் பாவிப்போர் அவற்றை பின்பற்றுவதை உறுதிப்படுத்தல்.
- தகவல் பாதுகாப்பு தொடர்பான நோக்கங்களை அடைவதற்கு இதர திணைக்களங்களுடன் நெருக்கமாக செயற்படுதல்
- பாதுகாப்பு தொடர்பாக சிறந்த கலாசாரமொன்றை உருவாக்குவதற்கு ஏற்ற வகையிலான அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவி அளித்தல்.
- HDFC வங்கியின் நிலைத்தன்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப தேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்பதோடு ஒழுங்குபடுத்தல் மற்றும் வங்கியின் தேவைகளின் நிலைத்தன்மையை அடைந்து தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவி அளித்தல்.

**தேவையான தகைமைகள்**

- தகவல் பாதுகாப்பு அல்லது முகாமைத்துவ தகவல் கட்டமைப்புகள் (Information Security/Management Information System) தொடர்பாக பல்கலைகழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

- இணையான பதவியொன்றில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல்.
- நிதித் துறைக்கு ஏற்புடைய ஒழுங்குபடுத்தல் மற்றும் கைத்தொழில் வழிகாட்டுதல்கள் தொடர்பான சம கால அறிவை கொண்டிருத்தல்.
- ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சி, எழுத்தாற்றல் மற்றும் தொடர்பாடல்

**வயதெல்லை** - 45 **வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.**

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதோடு தரம்** III (3) **பதவிக்கு அமர்த்தப்படுவார்கள்.**

***மென்பொருள் பொறியியலாளர்***
**SOFTWARE ENGINEER**

**பிரதான பொறுப்புகள்**

- பாவிப்போர் தேவைகளை ஆய்வு செய்தல்
- குறியீடு ஆக்கம் மற்றும் பரிசோதித்தல், தேவைக்கேற்றவாறு அவற்றை சாதகமாக்குதல் மற்றும் மீள எழுதுதல் மற்றும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய எந்தவொரு திட்டயாக்குனருடனும் தொடர்பாடலை பேணல்
- புதிய மென்பொருள் வேலைத்திட்டங்கள் மற்றும் கணினி தொழிற்பாட்டு கட்டமைப்புகளை பரிசோதித்தல், உருவாக்குதல் மற்றும் இயற்றுதல்
- கணினி மற்றும் வன்பொருளை செயற்படுத்தும் மென்பொருள் மற்றும் கட்டமைப்புகளை மதிப்பீடு செய்தல்.
- நவீனமயப்படுத்த வேண்டிய துறைகளை ஆய்வு செய்வதோடு அடையாளங் கண்டு தற்பொழுது காணப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல்.
- காணப்படும் மென்பொருள் உற்பத்திகளை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட தளங்களை ஒருங்கிணைத்து செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில்நுட்ப குறிப்புகளை உருவாக்குதல்
- தொழில்நுட்ப ஆக்கங்களுடன் தொழிற்பாட்டு கோப்புகளை இயற்றுதல்
- மென்பொருள் குறைபாடுகளை கண்காணித்தல் மற்றும் சீராக்கல் மூலம் கட்டமைப்புகளை பேணுதல்
- தற்பொழுது காணப்படும் தொழிற்பாட்டு கட்டமைப்புகளை இயற்றுதல் அல்லது புதுப்பிக்கும் நோக்கத்துடன் மென்பொருள் கட்டமைப்புகளின் பராமரிப்பு மற்றும் செயற்பாடு தொடர்பாக சேவை வழங்குநர் மற்றும் பணியாட்டொகுதியோடு கலந்துரையாடுதல்.
- புதிய தொழில்நுட்பம் தொடர்பாக ஆராய்தல்.
- பொறியியல் கோட்பாடுகள் மற்றும் திட்ட ஆவண மொழி அறிவை பயன்படுத்தி வங்கிக்கு மென்பொருள் தீர்வுகளை கட்டியெழுப்புதல் மற்றும் கணினி

மென்பொருள் உள்ளீடுகளை திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், பரிசோதித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**தேவையான தகைமைகள்**

- கணினி இயக்கத் திட்டச் செயலாக்கம் (Programing) தொடர்பாக 2 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினியியல் (Computer Science) தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல்.
அல்லது
- கணினி இயக்கத் திட்டச் செயலாக்கம் (Programing) தொடர்பான 3 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கணினியில் (Computer Science) டிப்ளோமா பெற்றிருத்தல். {குறைந்த பட்சம் ஓராண்டு கால டிப்ளோமாக இருத்தல் வேண்டும்}
- Java, dotNet, mobile application, c# மற்றும் Orade SQL ஐ பாவித்து வங்கியொன்றிலோ அல்லது நிதி நிறுவனமொன்றில் மென்பொருள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்திருத்தல் மேலதிக தகைமை ஆகும்.
**வயதெல்லை** - 45 **வயதிற்கு கீழே விரும்பத்தக்கது**.

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதோடு தரம்** IV **பதவிக்கு அமர்த்தப்படுவார்கள்.**

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 13.03.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.
எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.
ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்
HDFC வங்கி,
த.பெ. இல 2085,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02
தொலைபேசி இல - 0112 356800 - இணைய தள முகவரி : www.hdfc.lk